


## ஆலந்தூரில்

# மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் 'ஆபீஸ் ரைடு' திட்டம்

## இயக்குனர் தொடங்கி வைத்தார்

சென்னை, ஜன.31–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் பெரிய நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் நலனுக்காக 'ஆபீஸ் ரைடு' எனும் புதிய வாகன திட்டம் நேற்று தொடங்கப்பட்டது. இந்த புதிய திட்டம் ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலைய வளாகத்தில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன இயக்குனர் (செயல்பாடுகள் பிரிவு) நரசிம் பிரசாத் தொடங்கி வைத்தார்.

மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பயணிகள் ரெயிலில் இருந்து இறங்கியதும் விரைவாக அலுவலகம் செல்லும் வகையில் இந்த வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இந்த வாகனம் ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து அசெண்டாஸ், குளோபல் இன்போ சிட்டி, ஆர்.எம்.இசட். மில்லேனியா, எல்காட், சிப்காட் உள்பட பெரிய நிறுவனங்கள் இருக்கும் பகுதிகள் நோக்கி இயக்கப்படும்.

விரைவில் டி.எம்.எஸ்., அண்ணாநகர் கிழக்கு, அண்ணாநகர் கோபுரம், கோயம்பேடு, அசோக்நகர் உள்பட மெட்ரோ ரெயில் நிலையங்களில் 'ஆபீஸ் ரைடு' சேவை விரிவுபடுத்தப்பட உள்ளது.